25.09.2025.
Case No.DVC.06/2024
ம.சா.1, தாட்சாயணி, க/பெ.ராஜ்கமல், மேல்பாதிரி கிராமம், வந்வாசி தாலுக்கா.
ம.சா.1 தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

திருமணத்திற்கு பின்னிட்டு எனது கணவரின் வீட்டின் முதல் மாடியில் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். கீழ்தளத்தில் 1ம் எதிர்மனுதாரர் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் நான் திருமணம் செய்துகொண்டு சென்ற சமயத்தில் தனியாகதான் குடியிருந்து வந்தார். அதேபோல் 3ம் எதிர்மனுதாரருக்கு எனது திருமணத்திற்கு முன்பே திருமணம் ஆகி 2 குழந்தைகள் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் சாலையனூர் கிராமம் கலசபாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் வசித்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்வதற்கு முன்பு சமுக நல அலுவலரிடம் புகார் மனு ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் நேரடியாக நீதிமன்றத்தில்தான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கு பரிகாரம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் மனு ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய சீர்வரிசை பொருட்கள் எல்லாம் நான் குடியிருந்து வந்த முதல் தளத்தில் வைத்து அனுபவித்து வந்தேனா என்றால் முதல் தளத்திலும் மற்றும் கீழ்தளத்தில் பீரோ மட்டும் இருந்தது.

என்னுடைய மனுவிலோ அல்லது முதல் விசாரணையிலோ கீழ்தளத்தில் எனது சீர்வரிசை பொருட்கள் பீரோ இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் நடத்திவந்த டிரேவல் பிஸ்னஸ் மூலமாக வந்த வருமானத்தை அவரது வங்கி கணக்கில் பராமரித்து வந்தார் என்று மனுவில் சொல்லியுள்ளேன் அதற்குரிய ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கையில் ஆவணங்கள் ஏதும் இல்லாததால் நான் தாக்கல் செய்யவில்லை. அதேபோல் குறிப்பாக என் கணவர் எந்த வங்கியில் கணக்கு வைத்திருந்தார் என்றும், அதில் எவ்வளவு தொகை இருந்தது என்றும் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் எனது கணவரும் எத்தனை காலமாக சேர்ந்து வாழ்தோம் என்றால் ஒருவருடம் மூன்று மாதங்கள் சேர்ந்து வாழ்ந்தோம்.

என் கணவருக்கு கேன்சா் இருக்கும் விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2023 நவம்பர் மாதத்தில் தெரியவந்தது. என் கணவர் எவ்வளவு நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து வந்தார் என்றால் மொத்தம் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். என் கணவர் என்னுடன் இருக்கும்போது ரத்தவாந்தி எடுத்தது தெரிந்து வலு கட்டாயமாக அவரது பெற்றோர் வீட்டிற்கு நான் அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. என் கணவரின் இறப்பிற்கு ஒரு மனைவியாக செய்யவேண்டிய சடங்குகளை செய்யாமல் மூன்றாம் நபர்போல குழந்தையுடன் 10 நிமிடம் இருந்துவிட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. குழந்தை 5 மாத குழந்தை என்பதால் நான் உடனடியாக சென்றுவிட்டேன். நான் மனுவில் சொல்லியுள்ளதுபோல் எதிர்மனுதாரர்கள் என் கணவரின் இறப்பிற்கு பிறகு சடங்குகளுக்காக என்னை அழைக்கவில்லை என்று சொல்வது முற்றிலும் தவறானது என்றால் சரியல்ல.

நான் என் கணவருக்கு எந்தவித மருத்துவ செலவுகளையும் செய்யாததால்தான் அதற்குரிய ஆவணங்களை நான ் தாக்கல ் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன எனது கணவருக்கு அவரது தாயாரும் சட்டப்படியான வாரிசு என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர்மூலம் சீதனை பொருட்கள் மற்றும் பரிகாரங்கள் கேட்டு எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பியதற்கு எதிர்மனுதாராகள் 3.5.2024ம ் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியும் அதனை மறைத்து நான் இம்மனுவினை தாக்கல ் செய்துள்ளேன ் என்றால ் சரியல்ல. இறந்துபோன என ் கணவருக்கு கடன்கள் இருந்ததாகவும், அதனை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் எற்றுக்கொண்டு கடன் தொகை கட்டினார்கள் என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர்கள் எந்த தேதி, நேரம் மற்றும் யார் முன்னிலையில் நான் குடியிருந்த வீட்டின் பூட்டை உடைத்து அதில் இருந்து அனைத்து பொருட்களையும் அள்ளி சென்றுவிட்டார்கள் என்றும், நானும் என் குழந்தையும் வீட்டிற்குள் நுழையக்கூடாது என தெரிவித்து கழுத்தைபிடித்து வெளியே தள்ளினார்கள் என்றால் சரிதான். எனக்கு தேதி மற்றும் நேரம் ஞாபகம் இல்லை. ஆனால் சம்பவம் நடத்தது உண்மை. எதிர்மனுதாரர்கள் என் வீட்டின் பூட்டை உடைத்து என்னை கழுத்தைபிடித்து தள்ளியது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. அது தொடர்பாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

நான் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு சான்றாவணங்கள் அனைத்தும் நகல்கள்தான் என்றால் சரிதான். அசல் ஆவணம் என் கைவசம் இல்லை. எனது தரப்பு சான்றாவணம்-9ல் எனது கணவரின் முகவரி ஆந்திர மாநில முகவரியாக குறிப்பிட்டு உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செயதுள்ள சான்றாவணம்-9ல் வாகனத்திற்கான பர்மிட்டில் 07.12.2022 முதல் 13.12.2022 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது அந்த ஒரு பயணத்திற்கான பர்மிட்டாகும். நான் தாக்கல் செய்துள்ள சான்றாவணம்-12ல் பொருட்களுக்கான ரசீதில் கடையின் பெயர் மற்றும் விலாசம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் வாங்கிய கடன் ரூபாய். 6 லட்சம் 25.10.2016ம் தேதியிலும் மற்றும் ரூபாய் 2 லட்சம் 08.01.2017 தேதியிலும் 2ம் எதிர்மனுதாரர் செலுத்தியுள்ளார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. நான் திருமணத்திற்கு நானும் என் கணவரும் குடியிருந்த வீடு அவரது தகப்பனார் ஜெலந்தர் பெயரில் உள்ளது என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. அந்த வீடு சோளிங்கர் வீட்டு வசதி வாரியத்தில் ரூ.12 லட்சம் கடனில் தற்போது உள்ளது என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் எனது கணவரின் தாத்தா, பாட்டியின் பெயரில் உள்ள ரைஸ்மில் நிலவள வங்கியல ் ரூ.9 லட்சம் கடனில் இருந்ததை 2ம் எதிர்மனுதாரர்தான ் கடனை திருப்பி செலுத்தினா ் என்றால ் சரியல்ல. எனது கணவரும ் சேர்ந்துதான் கடனை செலுத்தினார். நான் சொல்வதுபோல் எனது கணவர் கடன் தொகை செலுத்தியிருந்தால் அதற்குரிய ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் 1ம் எதிர்மனுதாரா் ரூ2 லட்சம் தொகையை மகளிர் குழுவில் இருந்து எடுத்து ராஜ்கமல் என்பவரின் கடன் தொகையை அடைக்க 15.12.2023ம் தேதி எனது கணவரிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

அதேபோல் 10.03.2024ல் 3 சவரன் செயினை முத்துட் பைனான்சில் வைத்து முத்து ரூ.1,10,000/- மருத்துவ செலவிற்காக 1ம்எதிர்மனுதாரார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதேபோல் 3ம் எதிர்மனுதாரரும் எனது கணவரின் மருத்துவ செலவிற்காக ரூ.2 லட்சம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் கோரியுள்ள பாதுகாப்பு கட்டளை, தங்குமிடம் கட்டளை, பண இழப்பு கட்டளை அனைத்தும் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதற்குரிய எந்த ஒரு ஆவணங்களையும் தாக்கல் செய்யாததால் அந்த பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதேபோல் கோரியுள்ள இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதார்களுக்கும் நான் கோரியுள்ள பரிகாரங்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. இம்மனு செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் சிவில் நீதிமன்றத்தில்தான் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.